# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com
Website:www.bankubeutn.in


சுற்றறிக்கை எண்:151:2017 நாள்: 04.12.2017

அன்பார்ந்த தோழர்களே,

## தொழிற்சங்கப் பயிற்சி

உலகளவில் தொழிற்சங்கங்கள் மட்டுமே இன்று ஊழியர்களின் நலன்களை காக்கும் அரணாக விளங்கி வருவது அனைவரும் அறிந்ததே. இந்தியாவில் வலுவான அடித்தளத்துடன் செயல்படும் தொழிற்சங்க இயக்கங்களில், வங்கி ஊழியர் தொழிற்சங்கங்கள் இன்றும் முதலிடம் வகித்துவருகின்றன. நமது பள்ளிகளோ, கல்லூரிகளோ தொழிற்சங்கம் பற்றிய சரியான புரிதலை மானவர்களிடம் ஏற்படுத்தவில்லை என்பதும் கசப்பான உண்மை. ஊழியர்கள் மட்டுமல்லாது ஒட்டுமொத்த தொழிலாளர் நலன், பொதுமக்கள் நலனுக்காக போராடும் இயக்கமாக வங்கி ஊழியர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

யூனியன் வங்கி ஊழியர் சங்கம் கடந்த பல ஆண்டுகளாக, தொடர்ந்து ஊழியர்களுக்கு தொழிற்சங்கக் கல்வியை அளித்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக எழுத்தர்களாக வங்கிப்பணியில் சேரும் ஊழியர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. புதிய ஊழியர்களுக்கு தொழிற்சங்கக் கல்வியை வழங்க, சங்கத்தின் செயற்குழு, 25.11.2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில், முடிவு செய்துள்ளது.

விருப்பமுள்ள ஊழியர்களுக்கு தொழிற்சங்கக் கல்வியை அளிக்கும் நோக்கில், வரும் 2018 பிப்ரவரி மாதம் நான்காவது வாரம் சனி, ஞாயிறு இரண்டு நாட்களுக்கு ஒரு பயிலரங்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயிலரங்கு நடைபெறும் இடம், வரும் விண்ணப்பங்களைப் பொருத்து அமையும். பயிலரங்கில் கலந்துகொள்ளும் தோழர்களுக்கு உணவு, போக்குவரத்து, தங்கும் வசதி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்படும்.

இந்தப் தொழிற்சங்கப் பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்பும் தோழர்கள், இந்தச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்ட படிவத்தை பூர்த்தி செய்து சங்க அலுவலகத்தில் 23.12.2017க்கு முன்பாக கிடைக்கும் வகையில் அனுப்பிட வேண்டுகிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**